ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ பாராயது ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ பாராயது ॥

## திருக்கடல்மல்லை - 1

‡பாராயதுண்டுமிழ்ந்த பவளத் தூணைப்⋆
படு கடலில் அமுதத்தைப் பரி வாய்கீண்ட
சீரானை⋆ எம்மானைத் தொண்டர் தங்கள்
சிந்தையுள்ளே⋆ முளைத்தெழுந்த தீங்கரும்பினை⋆
போர் ஆனைக் கொம்பொசித்த போர் ஏற்றினைப்⋆
புணர் மருதம் இற நடந்த பொன் குன்றினை⋆
கார் ஆனை இடர் கடிந்த கற்பகத்தைக்⋆
கண்டதுநான் கடல் மல்லைத் தல சயனத்தே (1)

‡பூண்டவத்தம் பிறர்க்கடைந்து தொண்டு பட்டுப்⋆
பொய்ந்நூலை மெய்ந்நூல் என்றென்றும் ஓதி
மாண்டு⋆ அவத்தம் போகாதே வம்மின்⋆ எந்தை
என் வணங்கப்படுவானை⋆ கணங்கள் ஏத்தும்
நீண்ட வத்தைக் கரு முகிலை எம்மான் தன்னை⋆
நின்ற வூர் நித்திலத்தைத் தொத்தார் சோலை⋆
காண்டவத்தைக் கனல் எரிவாய்ப் பெய்வித்தானைக்⋆
கண்டது நான் கடல் மல்லைத் தல சயனத்தே (2)

உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்தி வேறாய்⋆
உலகுய்ய நின்றானை⋆ அன்று பேய்ச்சி
விடம் பருகு வித்தகனைக்⋆ கன்று மேய்த்து
விளையாட வல்லானை வரைமீ கானில்⋆
தடம் பருகு கரு முகிலைத் தஞ்சைக் கோயில்⋆
தவ நெறிக்கோர் பெரு நெறியை வையம் காக்கும்⋆
கடும் பரிமேல் கற்கியை நான் கண்டு கொண்டேன்⋆
கடி பொழில் சூழ் கடல் மல்லைத் தல சயனத்தே (3)

பேய்த் தாயை முலை உண்ட பிள்ளை தன்னைப்⋆
பிணை மருப்பில் கருங்களிற்றைப் பிணை மான் நோக்கின்⋆
ஆய்த் தாயர் தயிர் வெண்ணெய் அமர்ந்த கோவை⋆
அந்தணர் தம் அமுதத்தைக் குரவை முன்னே
கோத்தானை⋆ குடம் ஆடு கூத்தன் தன்னைக்⋆
கோகுலங்கள் தளராமல் குன்றம் ஏந்திக்
காத்தானை⋆ எம்மானைக் கண்டு கொண்டேன்⋆
கடி பொழில் சூழ் கடல் மல்லைத் தல சயனத்தே (4)

பாய்ந்தானைத் திரி சகடம் பாறி வீழப்⋆
பாலகனாய் ஆல் இலையில் பள்ளி இன்பம்
ஏய்ந்தானை⋆ இலங்கொளி சேர் மணிக் குன்றன்ன⋆
ஈர் இரண்டு மால்வரைத் தோள் எம்மான் தன்னை⋆
தோய்ந்தானை நிலமகள் தோள் தூதில் சென்று⋆ அப்-
பொய் அறைவாய்ப் புகப் பெய்த மல்லர் மங்கக்
காய்ந்தானை⋆ எம்மானைக் கண்டு கொண்டேன்⋆
கடி பொழில் சூழ் கடல் மல்லைத் தல சயனத்தே (5)

கிடந்தானைத் தடங்கடலுள் பணங்கள் மேவிக்⋆
கிளர் பொறிய மறி திரிய அதனின் பின்னே
படர்ந்தானைப்⋆ படுமதத்த களிற்றின் கொம்பு
பறித்தானைப்⋆ பார் இடத்தை எயிறு கீற
இடந்தானை⋆ வளை மருப்பின் ஏனம் ஆகி⋆
இருநிலனும் பெருவிசும்பும் எய்தா வண்ணம்
கடந்தானை⋆ எம்மானைக் கண்டு கொண்டேன்⋆
கடி பொழில் சூழ் கடல் மல்லைத் தல சயனத்தே (6)

பேணாத வலி அரக்கர் மெலிய அன்று⋆
பெருவரைத் தோள் இற நெரித்தன்றவுணர் கோனை⋆
பூண் ஆகம் பிளவெடுத்த போர் வல்லோனைப்⋆
பொரு கடலுள் துயில் அமர்ந்த புள் ஊர்தியை⋆
ஊண் ஆகப் பேய் முலை நஞ்சுண்டான் தன்னை⋆
உள்ளுவார் உள்ளத்தே உறைகின்றானை⋆

காணாது திரி தருவேன் கண்டு கொண்டேன்⋆
    கடி பொழில் சூழ் கடல் மல்லைத் தல சயனத்தே (7)

பெண் ஆகி இன் அமுதம் வஞ்சித்தானைப்⋆
    பிறை எயிற்றன்றடல் அரியாய்ப் பெருகினானை⋆
தண் ஆர்ந்த வார் புனல் சூழ் மெய்யம் என்னும்⋆
    தட வரைமேல் கிடந்தானைப் பணங்கள் மேவி⋆
எண்ணானை எண் இறந்த புகழினானை⋆
    இலங்கொளி சேர் அரவிந்தம் போன்று நீண்ட
கண்ணானைக்⋆ கண் ஆரக் கண்டு கொண்டேன்⋆
    கடி பொழில் சூழ் கடல் மல்லைத் தல சயனத்தே (8)

தொண்டாயர் தாம் பரவும் அடியினானைப்⋆
    படி கடந்த தாளாளற்காளாய் உய்தல்
விண்டானை⋆ தென் இலங்கை அரக்கர் வேந்தை⋆
    விலங்குண்ண வலங்கைவாய்ச் சரங்கள் ஆண்டு⋆
பண்டாய வேதங்கள் நான்கும்⋆ ஐந்து
    வேள்விகளும் கேள்வியோடங்கம் ஆறும்
கண்டானை⋆ தொண்டனேன் கண்டு கொண்டேன்⋆
    கடி பொழில் சூழ் கடல் மல்லைத் தல சயனத்தே (9)

‡பட நாகத்தணைக் கிடந்தன்றவுணர் கோனைப்⋆
    பட வெகுண்டு மருதிடைப் போய்ப் பழன வேலித்⋆
தடம் ஆர்ந்த கடல் மல்லைத் தல சயனத்துத்⋆
    தாமரைக்கண் துயில் அமர்ந்த தலைவன் தன்னை⋆
கடம் ஆரும் கருங்களிறு வல்லான்⋆ வெல் போர்க்
    கலிகன்றி ஒலிசெய்த இன்பப் பாடல்⋆
திடம் ஆக இவை ஐந்தும் ஐந்தும் வல்லார்⋆
    தீவினையை முதல் அரிய வல்லார் தாமே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥